இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 10-08-2024

# மனச்சாட்சியே இல்லையா?

மனச்சாட்சியே இல்லையா? இதயமே இல்லையா? வெட்கமே இல்லையா? கூச்சமே இல்லையா? - என்றுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பார்த்துக் கேட்க வேண்டி இருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்காக ஒன்றிய அரசு கொடுத்த நிதி விவரங்கள் வெளியாகி இருக்கின்றன. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஒதுக்கிய தொகை ஏதுமில்லை. இதில் அதிர்ச்சி ஏதுமில்லை.

டெல்லிக்கு 43 ஆயிரம் கோடி, பெங்களூருக்கு 7 ஆயிரம் கோடி, மும்பைக்கு 4 ஆயிரம் கோடி, சூரத்துக்கு 4 ஆயிரம் கோடி, அகமதாபாத்துக்கு 2.5 ஆயிரம் கோடி, கான்பூருக்கு 2.6 ஆயிரம் கோடி, டெல்லியில் இன்னொரு திட்டத்துக்கு 3 ஆயிரம் கோடி, பாட்னா, நாக்பூர், புனே ஆகிய நகரங்களுக்கு தலா ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு, இந்தத் திட்டங்களுக்கு ஏன் நிதி ஒதுக்கினீர்கள் என்று கேட்கவில்லை. சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஏன் நிதி ஒதுக்கவில்லை என்பதுதான் நம்முடைய கேள்வி.

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எழுத்து மூலமாகக் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த ஒன்றிய அரசு, “சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ( phase 2) இதுவரை எந்த ஒரு நிதியும் வழங்கவில்லை” என்று ஒப்புக்கொண்டுவிட்டது. இதைச்சொல்வதற்குக் கூச்சமே இல்லையா?

**சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகள் என்பது 118.9 கிலோ மீட்டர் தூரம் கொண்டது ஆகும். இதன் மொத்த மதிப்பீடு 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய். இது அதிகமான நிதி ஒதுக்க வேண்டிய திட்டமாக இருக்கிறது என்கிறது ஒன்றிய அரசின் பதில். இது மாநில அரசின் திட்டமாகச் செயல்படுத்தப்படுவதாக கை கழுவிவிட்டார்கள்.**

**மற்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படுவது அதிக மதிப்பீடு கொண்ட திட்டங்கள் அல்லவா? தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கும் போதுதான் அதிக மதிப்பீடு என்று தெரிகிறதா?**

சரி சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகள்தான் மாநில அரசின் திட்டம் என்று ஒதுக்கிவிட்டீர்கள். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையானது ஒன்றிய அரசின் திட்டம் தானே? அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளீர்கள்? எதுவுமில்லை. உங்களுக்கு மனச்சாட்சியே இல்லையா?

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்ட நிதிநிலை அறிக்கையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிதி ஒதுக்குவதாக எந்த அறிவிப்பும் இல்லை. ‘தமிழ்நாடு’ என்று சொல்வதற்கே அவருக்கு வாய் கசக்கும். சொல்ல மறுத்திருப்பார். மக்களவையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா இதுதொடர்பாக கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் நட்டா சொல்கிறார், “மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்பட்டப்படுவதற்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்தை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். மிக விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும்” என்று சொல்லி இருக்கிறார். 2015 ஆம் ஆண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசால்அறிவிக்கப்பட்டு, 2019ஆம்ஆண்டுபிரதமர்நரேந்திரமோடியால் அடிக்கல் நாட்டப்பட்ட மருத்துவமனை இது. மெட்ரோ போல 118 கிலோ மீட்டர் தூரத்துக்கு அமைக்க வேண்டிய 63 ஆயிரம் கோடி திட்டமல்ல இது. ஒரே ஒரு பில்டிங். இரண்டு ஆயிரம் கோடியில். அதனைக் கூட பத்தாண்டுகளாக அமைக்க முடியவில்லை என்றால், அமைக்க முடியாத கையாலாகாதவர்களா ஒன்றிய ஆட்சியாளர்கள்?

தொழில்நுட்பக் காரணங்களால்தான் தாமதம் என்கிறார் நட்டா. என்ன தொழில் நுட்பம் என்பதை அவரால் விளக்க முடியவில்லை. இதே நட்டா, “மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் 95 சதவிகிதம் முடிந்துவிட்டன” என்று கடந்த ஆண்டு மதுரையில் வைத்துச் சொன்னவர் தான் இவர்.

இமாச்சலப் பிரதேசம் பிலாஸ்பூரில் 1,470 கோடி ரூபாய் மதிப்பில் 2017 அக்டோபரில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டிய எய்ம்ஸ் கட்டி முடிக்கப்பட்டு 2022 அக்டோபர் 5 ஆம் தேதி திறந்தும் வைத்து விட்டார். ஆனால் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அப்படியே சுற்றுச்சுவர் மட்டும் கட்டப்பட்டுக் குட்டிச் சுவராகக் கிடக்கிறது. பிலாஸ்பூரில் ஏன் திறந்தீர்கள் என்று கேட்கவில்லை. மதுரையில் மட்டும் கட்டுவதற்கு ஏன் மனமில்லை என்று கேட்கிறோம்.

**மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான திட்ட மதிப்பீடு 2021.51 கோடி ரூபாய். இவர்கள் அறிவித்த போது திட்ட மதிப்பீடு 900 கோடி தான். ஆண்டுகள் பலவாக இழுத்ததால் இப்போது 2 ஆயிரம் கோடியைத் தாண்டி விட்டது. இந்தத் திட்ட மதிப்பீட்டுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்றால் 64 கோடி மட்டும் தான்.**

**அதாவது 2021.51 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்துக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கிய நிதி 64 கோடி மட்டும் தான். கடந்த ஆண்டு 27.50 கோடி ரூபாய் மட்டும் தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒதுக்கி இருக்கிறது. நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுகாதாரத் துறை இணை அமைச்சர் அனுப்பிரியா படேல் சொல்லி இருக்கிறார்.**

**மதுரை எய்ம்ஸ் கட்டத் தாமதம் ஆகிவிட்டது என்று சொல்வதும் ஒன்றிய அமைச்சர் தான். மூன்று ஆண்டுகளில் குறைவான தொகை ஒதுக்கியதாக ஒப்புக் கொண்டதும் ஒன்றிய அமைச்சர் தான். சென்னை மெட்ரோ திட்டத்துக்கு நிதி ஒதுக்கவில்லை என்று சொல்வதும் ஒன்றிய அரசு தான். அதனால்தான், மனச்சாட்சியே இல்லையா? இதயமே இல்லையா? வெட்கமே இல்லையா? கூச்சமே இல்லையா? - என்று ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பார்த்துக் கேட்க வேண்டி இருக்கிறது, அவர்களுக்கு அதைப் பற்றிய கவலை இல்லை என்றாலும்!**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2024) கோயம்புத்தூர் மாவட்டம், கணியூர், கலைஞர் திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2024) கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.41.57 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள உயிரி அறிவியல் மற்றும் சமூக அறிவியல் துறைக் கட்டடங்களை திறந்து வைத்தார். இவ்விழாவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர். ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மெட்ரோ ரயில் திட்ட பணிகள்

# குஜராத்திற்கு ரூ.6500 கோடி! தமிழ்நாட்டிற்கு பூஜ்ஜியம்!

## தயாநிதி மாறன் எம்.பி. கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக. 10 -

மெட்ரோ ரயில் திட்ட பணிகளுக்காக குஜராத்திற்கு ரூ.6500 கோடி ஒதுக்கிய ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு எந்தவித நிதியும் ஒதுக்க வில்லை என்று தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது. சென்னை மெட்ரோ ரயில் திட்ட பணிகள் தொடர்பாக திமுக எம்.பி. தயாநிதி மாறன் மக்களவையில் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு: சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகளுக் காக தற்போது வரை ஒதுக்கிய நிதி மற்றும் அனுமதி விவரம் என்ன?.

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகளுக்கு நிதி ஒதுக் கீடு செய்வதில் தாமதம் ஏன்?. இந்த திட்டத்திற்கு கடந்த 3 ஆண்டுகளாக ஒப்புதல் கொடுக்காமல் நிலுவையில் வைத்திருப் பது ஏன்?. இந்த திட்டத் திற்கு உடனடியாக ஒப்பு தல் அளிக்கும்படி தமிழ்நாடு அரசு வைத்த கோரிக்கைக்கு ஒன்றிய அரசு எடுத்த முடிவு என்ன?. கடந்த 5 ஆண்டு களாக நாடு முழுவதும் நடக்கும் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மாநிலம் மற்றும் நகரம் வாரியாக ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதிவிவரங் களை வெளியிட வேண் டும். இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியி ருந்தார்.


இந்த கேள்விக்கு ஒன் றிய வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் தோகன் சாகு அளித்த பதில் வருமாறு: சென் னையில் 118.9 கிமீ தூரத் திற்கு மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பாதை அமைக்க ரூ. 63,246 கோடி மதிப்பி லான திட்டத்தை தமிழ் நாடு அரசு தயாரித்து அனுப்பி வைத்தது. மிக வும் அதிக மதிப்பு கொண்ட இந்த திட் டத்தை செயல்படுத்தும் சாத்தியம் மற்றும் அதற்கு தேவையான வளங்கள் குறித்து பரிசீலிக்கப்பட் டது. தற்போது சென்னை மெட்ரோ ரயில் இரண் டாம் கட்ட பணிகள் அனைத்தும் மாநில திட் டமாக செயல்படுத்தப் பட்டு வருகிறது.



அந்த திட்டத்தை செயல்படுத்த தேவை யான அனைத்து நிதியை யும் தமிழ்நாடு அரசுதான் வழங்கி வருகிறது. நாடு முழுவதும் தற்போது 12 மெட்ரோ ரயில் திட்ட பணிகள் நடந்து வருகி றது. நாக்பூர் 2ம் கட்ட பணிகளுக்கு 2022 டிசம் பர் மாதமும், புனே திட் டத்திற்கு 2023 அக்டோ பரிலும், கான்பூர் மெட்ரோவுக்கு 2019 மே மாதமும், ஆக்ரா திட்டத் திற்கு 2019 மே மாதமும், கொச்சி முதல்பாதை விரி வாக்க திட்டத்திற்கு 2023 பிப்ரவரியிலும், கொச்சி 2ம் கட்ட பாதைக்கு 2022 நவம்பரிலும்,

பெங்களூரு மெட்ரோ ரயில் 2ம்கட்டபாதை பணிகளுக்கு 2021 ஜூன் மாதமும், டெல்லி மெட்ரோ 4ம் கட்ட பாதை திட்டத்திற்கு 2019 ஜூலையிலும், குரு கிராம் திட்டத்திற்கு 2023 ஜூலையிலும், டெல்லி மெட்ரோ 4ம் கட்ட பாதையில் இரண் டாம் கட்ட பணிகளுக்கு 2024 மார்ச் மாதமும், அகமதாபாத் இரண் டாம் கட்ட பாதை பணி களுக்கு 2019 ஜூன் மாத மும், சூரத் மெட்ரோ திட்டத்திற்கு 2019 ஜூன் மாதமும் ஒப்புதல் வழங் கப்பட்டது.

இதில் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கு இதுவரை ஒன்றிய அரசு எந்தவித நிதியும் ஒதுக்கவில்லை.




அதே சமயம் குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் மெட்ரோ ரயில் திட்டத் திற்கு கடந்த 2 ஆண்டுக ளில் 2,596 கோடியும், சூரத் திட்டத்திற்கு ரூ.3961 கோடியும் என மொத்தம் ரூ.6558 கோடி நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கி உள்ளது. உபியில் கான்பூர் திட்டத்திற்கு ரூ.2629 கோடி, ஆக்ரா திட்டத்திற்கு ரூ.1913 கோடி ஒதுக்கப்பட்டுள் ளது. இவ்வாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

நன்றி : தினகரன்



புதுடெல்லி அண்ணா – கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் கழக எம்.பி.க்களும், கூட்டணி கட்சி எம்.பி.க்களும் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் வேணுகோபால், மாணிக் தாக்கூர், சமாஜ்வாடி பொதுச் செயலாளர் ராம் கோபால் யாதவ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் பிருந்தா காரத், வி.சி. கட்சி ரவிக்குமார், சி.பி.ஐ. டி.ராஜா, சுப்புராயன், செல்வராஜ், ம.தி.மு.க. துரை வைகோ, திரிணாமுல் காங்கிரஸ் தோலாசென் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை கழக உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.